4வது கூடுதல் மாவட்ட மற்றும்  அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **C.** ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **559/2022** நாள்: **17.12.2024** வா.சா.**1** – சாதிக்பாட்சா

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை

கிரையப்பத்திரம் எழுதித் தரக்கோரியும், மாற்றுப்பரிகாரமாக கிரைய முன்பணத்தை திரும்ப தரக்கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் காலக்கெடு 5 மாதம் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஒப்பந்த காலத்திற்குள் பாக்கி தொகையை செலுத்தி கிரைய பத்திரம் பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் முன்பணத்தை இழந்துவிட வேண்டும் என்பது ஒப்பந்தத்தில் உள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தின் போது சொத்து Shri Ram Finance நிறுவனத்தில் சொத்து அடமானம் இருந்தது தெரியும். அடமானம் குறித்து கிரைய ஒப்பந்தத்தில் எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்துக்களின் அசல் ஆவணங்கள் கைவசம் இல்லாததால் இந்த ஒப்பந்தத்தின் போது அசல் ஆவணம் கொடுக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கொடுத்த பணம் ரூ.5 லட்சத்திற்கு செக்யூரிட்டிக்காக தான் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தின் போது ஒரே தவணையில் மேற்படி Shri Ram Finance நிறுவனத்தில் தொகையை செலுத்திவிடுவதாக கூறியதால் கிரைய ஒப்பந்தத்தில் அதுகுறித்து சொல்லவில்லை. அவ்வாறு ஒரே தவணை தொகை எதுவும் குறிப்பிடப்பட்டால் அந்த தொகையை நான் செலுத்துவதாக நான் கூறினேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த தேதியில் இருந்து 5 மாத காலத்திற்குள் கிரைய பத்திரம் எழுதி பெற நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். வா.சா.ஆ.6 ஆவணத்தில் அவ்வாறு Whats app மூலம் தகவல் தெரிவித்ததாக கூறினாலும், எந்த எண்ணில் இருந்து எந்த எண்ணுக்கு

அனுப்பப்பட்டுள்ளது என்று இல்லை என்றால் என்னுடைய மொபைல் நம்பரில் இருந்து தான் அனுப்பினேன். அதில் பாக்கி கிரைய தொகையுடன் இருப்பதாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அது தான் அதற்கு பொருள் ஆகும். பிரதிவாதி பெண் என்பதால் அவரது கணவருக்கு குறுஞ்செய்தி அனுப்பியுள்ளேன். மேற்படி வா.சா.ஆ.6 ஆவணம் உரிய சான்றிதழ் இல்லாததால் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சான்றிதழ் வைத்துள்ளேன். கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடு முடிந்த பிறகு தான் 05.08.2022 ல் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரைய பத்திரம் எழுதிப்பெற தயாராக இருந்திருந்தால் உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி என்னுடைய வங்கி கணக்கில் ரூ.42 லட்சம் இருந்ததாக ஏதேனும் குறிப்பு காணப்படுகிறதா என்றால் இல்லை. 13.09.2021ம் தேதியன்று என்னுடைய வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. மேற்படி தேதியில் என்னிடம் போதுமான பணம் இல்லை என்றும், மூத்துட் பைனான்சில் நகைக்கடன் பெற்று தான் கிரைய முன் பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் பணம் இருந்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. லாபத்திற்காக தான் மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்றும், அது சொத்தை கிரையம் பெறுவதற்காக ஏற்படுத்தபட்டுள்ளது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த காலத்திற்குள் அதனை நிறைவேற்ற நான் சட்டப்படியான நடவடிக்கை எடுக்காததால் நான் கோரியுள்ள இரண்டு பரிகாரங்களும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி மற்றும் அவரது கணவர் மீது உண்மைக்கு மாறான விவரங்கள் குற்ற நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி சுவாதீனத்தை இடையூறு செய்ததால் தான் அவர் என் மீது உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. Shri Ram Finance ல் தொகையை செலுத்துவதற்கு நான் எந்த உதவியும் பிரதிவாதிக்கு செய்யாததால் பிரதிவாதி தான் அதனால் நஷ்டம் அடைந்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அட்வான்ஸ்

இழந்துவிட வேண்டும் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2024.12.17 18:01:06 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.